RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s87

OPEN ACCESS

# புறத்திணைகளில் வெட்சித்திணையும் அதன் துறைகளும் ஓர் ஆய்வு

**ரா. நாகேந்திரன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அருப்புக்கோட்டை-626134, தமிழ்நாடு, இந்தியா

# A study of cattle-lifting and it's modalities in Puranaanuru

**R. Nagendran [a, *]**

[a] Department of Tamil, Goverment Arts & Science College, Arippukottai-626134, Tamil Nadu, India

* Corresponding Author: rrnagendran62@gmail.com

Received: 03-05-2021
Revised: 26-04-2022
Accepted: 01-05-2022
Published: 04-07-2022

Check for updates

## ABSTRACT

Grammar or Grammatical syntax forms the crux of the language. Grammar is an essential one not only in Tamil but also for all the world languages. Tamil language is one of the oldest surviving languages in the world. Any language can be refined language provided that language will be spoken by a large group of people and also it should heaviest own literariness. Among the languages spoken in India Tamil, Telugu, Konda, Tulu and Coorg forms the Dravidian linguistic family group. They are identified as the refined languages from the Dravidian group. Both the language and the literatures contributes languages. There are lot of literary works and linguistic works and linguistic works are published during the various time periods. There are various literary works are published after the Publication of Tholkappiam. These literary marvels Portrays the lifestyle, culture, tradition and socioeconomic setup of the people. Those literary works distinguishes the lifestyle and social practices of that people as 'Agam' and 'Puram. Though this we can easily identify that the people follow both 'Agam' and 'Puram' form of lifestyle. Events containing private affairs are confrains as 'Agam and War, Valour, Pride and charity forms the 'Puram'. Tamil Grammar is divided into Agapporul and Purapporul. Literary works based on Purapporal focused on the events based on outer lifestyle of the people. Purapporul can be identified as Seven and Twelve. Vetchithinai is defined as the capturing of cows and cattle breeds. The formation or the beginning of the Vetchithinai is because of the competition between the other two thinais like 'Palai' and 'Mullai'. We can assumed that Vetchithinai is formed based on this competition. This research article clearly shows the difference between the Vetchithinai which is portrayed in Tholkappiam and the Vetchithinai which is portrayed in Purapporal Venbamalai and its developments in that thinai.

**Keywords:** Vetchithinai, Cattle lifting, Padaieyangu aravam, Virichi, Undattu, Pannirupadalam

## முன்னுரை

புறத்திணைகள் ஏழு என்றும் பன்னிரண்டு என்றும் கூறப்படுகின்றது. இப்புறத்திணைகளைத் தொல்காப்பியர் ஏழு என்று குறிப்பிடுகின்றார். புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலினை இயற்றிய ஐயனாரிதனார் பன்னிரண்டு என்று குறிப்பிடுகின்றார். அத்திணைகளுள் வெட்சித்திணை பற்றியும் அதனுடைய துறைகளைப் பற்றியும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது. வெட்சித்திணை என்பது ஆநிரைகளைக் கைப்பற்றுவதைக் குறிக்கின்றது. தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்கள் ஆநிரைக் கைப்பற்றுதலை வெட்சித்திணை

என்றே குறிப்பிடுகின்றன. ஆனால் வெட்சித்திணையின் துறைகளை தொல்காப்பியம் பதினான்கு என்றும் புறப்பொருள் வெண்பாமாலை பத்தொன்பது என்றும் குறிப்பிடுவது அவ்வக்கால நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களே காரணம் என்ற கருத்து கூறப்படுகின்றது. தொல்காப்பியத்திற்கு முன்னதான ஆநிரை கவர்தல் என்பது எத்தகைய நிலையில் இருந்தது என்பது இங்கு நோக்கத்தக்கது. அக்காலத்தில் திணைகளின் அடிப்படையில் மக்கள் வாழ்ந்தனர். குறிஞ்சித்திணையில் வாழந்த மக்கள் மலைவாழ் மக்கள் என்றும், முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் ஆயர் என்றும் மருதத்திணையில் வாழ்ந்த மக்கள் உழவர் என்றும், நெய்தல் நிலத்தில் வாழந்த மக்கள் பரதவர் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். ஆனால் மேற்கண்ட நான்கு திணைகளோடு பாலை என்ற திணையும் குறிப்பிடப்படுகின்றது. இப்பாலைத் திணைக்குத் தொல்காப்பியர் நிலம் வகுக்கவில்லை. வெட்சித்திணை என்று குறிப்பிடப்படுகின்ற ஆநிரை கவர்தல் இப்பாலைத்திணையில் உள்ள மக்களால் மேற்கொள்ளப்பட்டது என்ற கருத்து கூறப்படுகின்றது. இங்கு ஒரு குறிப்பிட்ட திணையில் வாழ்ந்த மக்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருட்களின் பற்றாக்குறையினால் வேறொரு திணைக்கு இடம்பெயருகின்றனர். அவ்வாறு இடம்பெயாந்த நிலமே பாலை என்று குறிக்கப்படுகின்றது. மேலும் குறிஞ்சித்திணைக்கும் பாலைத்திணைக்கும் இடையே உள்ள நிலமே பாலைத்திணை என்றும் குறிக்கப்படுகின்றது. தொல்காப்பியர் நிலம் வகுக்காத பாலை நிலத்திற்கு ஆநிரை கவர்தல் என்பது எப்படி பொருந்தும்? என்பது இங்கு நோக்கத்தக்கது. அதே போன்று புறத்திணைகளைத் தொல்காப்பியரும் ஐயனாரிதனாரும் எத்தகைய நிலையில் கூறினர் என்பதும் துறைகளின் வகைப்பாடுகளைக் கூறும் போது தொல்காப்பியரும், ஐயனாரிதனாரும் எத்தகைய நிலையில் வேறுபடுகின்றனர்? என்பதும் இங்கு ஆய்வுப்பொருளாகக் கொண்டு இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

## தொல்காப்பியமும் வெட்சியும்

பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம் புறத்திணைகளை ஏழாகப் பகுக்கின்றது. 'வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண் என்று ஏழு திணைகளாகத் தொல்காப்பியம் கூறுகின்றது. அவற்றுள் வெட்சித்திணையினைத் தொல்காப்பியர்

'வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக்களவின்

ஆ தந்து ஓம்பல் மேவற்று ஆகும்'

அரசனால் அனுப்பப்பட்ட போர் மறவர்கள் பகைவர்களுடைய ஆநிரைகளைக் கைப்பற்றிக் கொண்டு வருதலே இந்த வெட்சித்திணையாகும் என்று மேற்கண்ட நூற்பா குறிப்பிடுவதன் மூலம் தொல்காப்பியர் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்த வெட்சித்திணைப் பற்றிய தகவலை அறிந்து வைத்துள்ளார் என்பதை அறிந்து கொள்ளலாம் (Manikkavasagan, 2010). இந்த செயல்பாடு அதாவது பசுக்களைக் கவர்ந்து கொண்டு வருதல் போருக்கான தொடக்கமாகவே கருதப்பட்டது. போர் என்பது இரு நாடுகளுக்கிடையே அல்லது இரு நிலத்தாரிடையே பகை ஏற்படும் பொழுது நிகழ்கின்ற சண்டையினைக் குறிக்கின்றது. இந்த வெட்சித்திணையினை ஆராயும் பொழுது ஒரு குறிப்பிட்ட நிலத்தில் இருக்கக்கூடிய வீரர்கள் மாற்றாருடைய நிலத்தில் காணப்படுகின்ற பசுக்களைக் கைப்பற்றி வருதலைக் குறித்தது. ஐவகை நிலங்களுள் பாலைத்திணையில் இருப்பவர்கள் தங்களுக்குத் தேவையானப் பொருட்களை வழிப்பறி செய்து பெற்றனர். அதோடு முல்லைத்திணையில் காணப்படுகின்ற பசுக்களைக் கைப்பற்றி வந்தனர் என்றும் கூறப்படுகின்றது. மானுட ஆய்வாளர்கள் முதலாவதாக ஐந்திணைகளுள் மலை சார்ந்த பகுதிகள் குறிஞ்சி நிலம் இருந்தது அதனைத் தொடர்ந்து முல்லைத்திணையும் மருதத்திணையும் நெய்தல் திணையும் காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றனர். இதன் அடிப்படையில் காடு சார்ந்த பகுதி முல்லை என்றும் வயல் சார்ந்த பகுதி மருதம் என்றும், கடல் சார்ந்த பகுதி நெய்தல் என்றும் குறிப்பிடப்படுகின்ற அதே வேளையில் மணல் சார்ந்த பகுதியாகக் குறிப்பிடப்படுகின்ற பாலைத்திணை ஆறரைக் கள்வர் நிறைந்த பகுதியாகவே காணப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல் பாலைத்திணையில் எந்த ஒரு பொருளும் கிடைக்காத நிலம் ஆகையால் அங்கே இருந்தவர்கள் வழிப்பறி செய்யும் தொழிலில் ஈடுபட்டனர். எனவே அவர்கள் முல்லைத்திணையில் காணப்பட்ட ஆநிரைகளைக் கைப்பற்றினர் என்றே கூறப்படுகின்றது.

பசுக்களைக் கைப்பற்றுதல் என்பது தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு இருந்ததா? என்பதை ஆராய வேண்டும். அவ்வாறு இருந்திருந்தால் அது எவ்வாறு அழைக்கப்பட்டது? என்பது குறித்தும் ஆராயப்பட வேண்டும். இங்கு வெட்சித்திணை என்பது பாலை நிலத்தில் உள்ள வீரர்கள் முல்லைத்திணையில் காணப்பட்ட ஆநிரைகளைக் கைப்பற்றினர் என்ற கருத்து கூறப்படுகிறது. இக்கருத்தினை புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தம்முடைய நூலினில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'பாலையில் ஆறலைத்து வாழும் வாழ்வினை மேற்கொண்டு வாழ்ந்த அம்மறவர் தாம் வேண்டும் பொருளை ஆண்டுப் பெற இயலாக் காலத்தில் அப்பாலையை அடுத்துள்ள நாடுகளுள் புகுந்து கொள்ளையிட்டு வாழும் வாழ்க்கையினை மேற்கொண்டனர். அப்பாலையை அடுத்து ஒரு பால் குறிஞ்சியும் ஒரு பால் முல்லையும் உளவெனினும் குறிஞ்சி அந்நிலத்துவாழ் மக்கட்குத் தேவையாம் பொருட்களைத் தருவதே அரிது. ஆகவே ஆண்டு வாழ்வோர் ஈட்டி வைத்திருக்கும் பொருள் எதுவும் இராது என்பதை அக் குறிஞ்சியல் ஒரு காலத்தில் வாழந்திருந்தவராய அம்மறவர் அறவர் ஆதலின் அவர்கள் தமக்குத் தேவையாம் பொருள் குறித்துக் குறிஞ்சி நிலக் குறவர்பால் செல்லாமல் முல்லை நிலத்தில் காணப்பட்ட ஆடு மாடுகளை அறிந்து கொண்ட அவர்கள் அத்தகைய முல்லை நிலம் புகந்து ஆயர்களின் ஆநிரைகளைக் கைப்பற்றிச் சென்று வாழ்தலை வழக்கமாகக் கொண்டு விட்டார்கள் அம்மறவர்கள். நிரைகோள் ஒழுக்கம் தொடக்கத்தில் தோன்றிய முறை இதுவே' என்று குறிப்பிடுகின்றார் (Kovindhan, 2003). எனவே தொல்காப்பியம் தோன்றிய காலகட்டத்துக்கு முன்பே நிரை கவர்தல் என்பது பாலை நிலத்து மறவர் மேற்கொண்ட செயல் என்று எண்ணத் தோன்றுகின்றது.

தொல்காப்பியம் கூறுகின்ற வெட்சித்திணை மற்றும் கரந்தைத்திணை போன்ற திணைகளை அவர் 'ஆறலைக்கும் கொடியோராய் அலைந்து திரிந்த அவர்கள் தங்கள் வாழிடத்தை அடுத்து உளதான முல்லை நிலத்தார் பால் ஆடும் மாடும் குவிந்திருக்கக் கண்டு அம் முல்லை நிலத்துள் அந்நிலத்தாராகிய ஆயர் அறியாதவாறு புகுந்து அவர் உடைமைகளைக் கொள்ளையிட்டு வரத் தலைப்பட்டனர். எனவே ஆநிரைகளைக் கொள்ளையிட்டுச் சென்ற பாலை நிலத்து மறவரைக் கொன்று தம் உடைமைகளை மீட்டுக் கொணர ஆயர் மேற்கோண்ட போரை ஆசிரியரான தொல்காப்பியனார் வெட்சிப் போர் என்னும் பெயர் அளித்துள்ளார் என்று குறிப்பிடுகின்றார் (Kovindhan, 2003).

மேற்கண்ட கூற்றின் அடிப்படையில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்ற வெட்சித் திணையிணையினையும், கரந்தைத்திணையினையும் சேர்த்தே நாம் வெட்சிப் போர் என்றே அறிந்து கொள்ளலாம். பசுக்களைக் கைப்பற்றக் கூடிய இந்த நிலையானது நாளடைவில் இரு நாட்டினரிடையே ஏற்படக்கூடிய போரின் தொடக்கமாகவே அமைந்து விட்டது. அதோடு மட்டுமல்லாமல் இந்நூலாசிரியர் வெட்சித்திணை மறவர்கள் சூடக்கூடிய வெட்சிப்பூ என்பது பாலைத்திணையில் பூக்கக்கூடிய மலர் என்று குறிப்பிடுகின்றார்.

'வெட்சி மலர் குறிஞ்சித் திணைக்கோ முல்லைத் திணைக்கோ முழுவதும் உரிமையுடையதாகாது. பாலைத் திணைக்கே உரியதாம்' என்கிறார் கோவிந்தன் (Kovindhan, 2003).

இந்தக் கருத்தின் அடிப்படையில் வெட்சி மலர் என்பது பாலைத்திணைக்குரிய மலராக இருந்ததா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும். அதோடு இந்த வெட்சி மலர் குறிஞ்சித்திணையிலும் முல்லைத்திணையிலும் பூக்கவில்லையா என்பதையும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டியதாகின்றது. ஏனென்றால் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 மலர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது வெட்சிமலர் என்பதையும் குறிப்பிடுகின்றார்.

## வெட்சித்திணையும் அதன் துறைகளும்

ஆநிரைகளைக் கைப்பற்றுவது என்பது வெட்சித் திணையாகும் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆநிரைகளை மீட்பது கரந்தைத் திணையாகும். தொல்காப்பியர் வெட்சித்திணையினையும், கரந்தைத் திணையையும் சேர்த்தே குறிப்பிடுகின்றார். அதே வேளையில் வெட்சித் திணையின் துறைகளை பதினான்கு என்று குறிப்பிடுகின்றார். படை வீரர்கள் எழுப்பக்கூடிய பேரொலி படை வீரர்களுக்கு

விரிச்சிப் பறவை காட்டும் சகுனம் வீரர்கள் அறியாத வண்ணம் செல்லுதல் ஒற்றறிந்து வருதல், ஆநிரைகள் உள்ள பகுதியைச் சுற்றி வளைத்தல் பகைவர்களைத் தாக்கி அழித்தல், பசுக்களைக் கைப்பற்றுதல், நிரைகளுக்காக வரக்கூடிய மறவர்களோடு சண்டையிடுதல் ஆநிரைகளைப் பாதுகாப்பாகக் கொண்டு வருதல் ஆநிரைகளை ஓரிடத்தில் நிறுத்துதல் ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொள்ளுதல், வெற்றியைக் கொண்டாடி மகிழ்தல் பசுக்களைப் பாணர் முதலிய இரவலர்களுக்கு வழங்குதல் போன்ற பதினான்கு துறைகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் மேற்கண்ட பதினான்கு துறைகளைப் பற்றி

‘படை இயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி

புடைகெடப் போகிய செலவே புடை கெட

ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்

முற்றின் ஆகிய புறத்து இறை முற்றிய

ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே

நோய் இன்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்

துந்து நிறை பாதீடு உண்டாட்டு கொடை என

வந்த ஈர் ஏழ் வகையிற்று ஆகும்’

என்று குறிப்பிடுகின்றார் (Manikkavasagan, 2010).

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு ஆநிரைகளைக் கைப்பற்றுதல் என்பது இடம் சார்ந்த கைப்பற்றுதலாக இருந்திருக்கக்கூடும். அத்தகைய கால கட்டத்தில் பொருட்களைக் கவருதல் என்ற அடிப்படையில் வெட்சி என்பது ஆநிரை கவர்தல் என்றே குறிப்பிடப்பட்டிருக்கலாம். கால வளர்ச்சியின் அடிப்படையில் அதனுடைய துறைகள் வளர்ச்சியடைந்திருக்கலாம். அதே வேளையில் வெட்சியின் துறைகள் பதினான்கு என்று குறிப்பிட்டதற்கான காரணத்தையும் இங்கு ஆராய வேண்டும். இலக்கணம் தோன்றுவதற்கு முன்னர் இலக்கியங்கள் தோன்றின என்ற கருத்தின் அடிப்படையில் மேற்கண்ட துறைகள் இலக்கியங்களின் அடிப்படையில் வகுக்கப்பட்டிருக்கலாம். இங்கு புறநானூறு என்னும் இலக்கியத்தினை நோக்கும் பொழுது வெட்சித்திணைக்கு குறைவான பாடல்களே உள்ளன என்பதையும் இங்கு நோக்க வேண்டும்.

விரிச்சி கேட்பது அதாவது சகுனம் பார்ப்பது ஒற்று அறிந்து கொண்டு வருவது ஆநிரைகளைக் கைப்பற்ற செல்லும் மறவர்கள் எழுப்பக்கூடிய பேரொலி என்னும் துறைக்கு அடுத்தபடியாக காணப்படுவதையும் இங்கு ஆராய வேண்டும். ஆநிரைகளைக் கைப்பற்றுவதற்காக படைகள் ஆரவாரத்துடன் செல்கின்றன. அதனடிப்படையில் படையியங்கு அரவம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ஆனால் விரிச்சி கேட்பதையும் ஒற்று அறிந்து கொண்டு வருதலையும் அதன் பின்னே வைக்கின்ற தொல்காப்பியர் விரிச்சி கேட்பதனை முதலாவதாக வைக்கவில்லை. மாறாக மேற்கண்ட துறைகளுக்கு அடுத்தபடியாக எதற்காக வைத்தா? என்று இங்கு எண்ணப்படல் வேண்டும்.

## புறப்பொருள் வெண்பாமாலையும் வெட்சியும்

ஐயனாரிதனார் என்பவரால் இயற்றப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை தொல்காப்பியர் கூறிய பதினான்கு துறைகளை சற்று விரித்து பத்தொன்பது என்று கூறுகின்றது. புதியதாக புலனறி சிறப்பு பிள்ளைவழக்கு துடிநிலை கொற்றவைநிலை வெறியாட்டு என்னும் ஐந்து துறைகளைக் குறிப்பிடுகின்றது. பகை நாட்டிற்கு சென்று ஒற்று அறிந்து வந்தவர்களுக்காக பரிசு வழங்குவதை புலனறிசிறப்பு என்றும் சகுனம் கூறியவர்களுக்கு ஆநிரைகளைக் கொடுப்பது பிள்ளைவழக்கு என்றும் துடி என்னும் பறையைக் கொட்டுபவனது குடிப்பெருமையை வெளிப்படுத்துவது துடிநிலை என்றும் ஆநிரை கவர்தலுக்குத் துணையாக நின்ற கொற்றவையை வழிபடுவது கொற்றவை நிலை என்றும்

ஆநிரை கவர்தலின் வெற்றிக்காக மறக்குடி மகளிர் முருகனுக்கு பூஜை செய்வதை வெறியாட்டு என்றும் மேற்கண்ட துறைகளின் விளக்கங்களாகக் குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியர் கூறிய ஏழு திணைகளை அவ்வாறே கூறாமல் புறப்பொருள் வெண்பாமாலையினை இயற்றிய ஐயனாரிதனார் பன்னிரண்டு திணைகள் என்று குறிப்பிடுகின்றார். அவ்வாறு கூறுவதற்கு என்ன காரணம்? என்று நோக்க வேண்டும். பன்னிருபடலம் என்னும் நூல் இப்புறப்பொருள் வெண்பாமாலைக்கு முதல் நூலாகக் கருதப்படுகின்றது. அதனையொற்றியே புறப்பொருள் வெண்பாமாலை எழுதப்பட்டுள்ளது. எனவே புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்படுகின்ற துறைகள் அக்காலக் கட்டத்தில் வளர்ந்த வளர்ச்சியின் அடிப்படையில் எழுந்தவைகளாகவே கருதலாம். மேலும் ஐயனாரிதனார்

'வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்

சென்று இகல்முனை ஆதந்தன்று'

மேற்கண்ட நூற்பாவின் மூலம் அரசனின் ஏவலோடும் அரசனின் ஏவலில்லாமலும் பசுக்களைக் கைப்பற்றுதலைக் குறிப்பது வெட்சித்திணை ஆயிற்று என்பதை அறிந்து கொள்ளலாம் (Iyyanarithanar, 2010). ஆகவே ஆநிரைகளைக் கைப்பற்றுதலைக் குறித்த இந்நிலையானது புறப்பொருள் வெண்பாமாலையில் மன்னுறு தொழில் தன்னுறு தொழில் என்று கால மாற்றத்தின் அடிப்படையிலேயே தோன்றிய நிலையினை அறிந்து கொள்ள முடிகின்றது. அந்த வகையில் மன்னுறு தொழில் என்பது மன்னனின் கட்டளைக்கு இணங்கி மறவர்கள் மாற்றாரின் நாட்டிலுள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் ஆகும். அரசு என்பது உருவாக்கம் பெற்ற காலத்தில் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் சங்க இலக்கிய காலம் இனக்குழு சமுதாயமாகவும் அரசு என்ற அமைப்பு உருவாகிக் கொண்டிருந்த காலமாகவும் இருந்த நிலையினை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டுவதை இங்கு குறிப்பிடலாம். ஆரம்பத்தில் ஒருவருக்கு ஒருவர் ஏற்பட்ட மோதல் உணர்வு நாளடைவில் இனக்குழுக்களிடையே ஏற்பட்டன. மனித நாகரிக வளர்ச்சியின் அடிப்படையில் வலிமையுள்ள ஒரு இனக்குழு வலிமையில்லாத இனக்குழு மோதியது. பழங்கால வரலாறுகள் இனக்குழு மோதல்களை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

ஆரம்ப காலப் போர்களில் அரசர்கள் தங்கள் மேலாதிக்கத்தினைத் திணித்தும் வலிமையைப் பறை சாற்றியும் மண உறவுகளை அமைத்துக் கொண்டும் பகை நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுவதை நாம் அறிந்து கொள்ளலாம். பண்டைய இந்தியாவில் பதினாறு மகா அரசுகள் இருந்ததாகவும் அத்தகைய அரசுகளில் வத்சா அவந்தி கோசலம் மகதம் போன்ற அரசுகள் தங்களுடைய மண உறவுகளால் ஆதிக்கத்தை நிலை நாட்டின என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

'பண்டைக்கால இந்தியாவில் திருமண உறவுகள் மூலம் அரச குலங்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது மரபாக இருந்தது. இத்திருமண அரச தந்திரம் அரசியல் சதுரங்க விளையாட்டில் வெற்றி பெறப் பயன்பட்டது.' என்று க. வெங்கடேசன் தம்முடைய நூலில் குறிப்பிடுகின்றார் (Venkatesan, 2017).

இங்கு புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் மன்னுறு தொழில் என்பது அரசன் தம்முடைய படைவீரர்களின் நலம் கருதி பகைநாட்டிற்கு சென்று ஆநிரைகளைக் கைப்பற்றிக் கொண்டு வருமாறு ஆணையிடுகின்றான். இந்தக் கருத்தினை 'தன் படை வீரன் போருக்குத் தயாராகின்றான் என்பதை உணர்ந்த அரசன் அவனைப் பகைவர் நாட்டுப் பசுநிரைகளைப் பற்றி கொணருமாறு பணித்தான்' என்று புலவர் கா. கோவிந்தன் தம்முடைய நூலில் மன்னுறு தொழிலின் எடுத்துக்காட்டுப்பாடலை மையமாக வைத்து குறிப்பிடுகின்றார் (Kovindhan, 2003).

புறப்பொருள் வெண்பாமாலை கூறும் வெட்சித்திணை ஆநிரை கவர்தலின் பிற்கால வளர்ச்சியாகவே இங்கு கருத இடமுண்டு. தொல்காப்பியர் கூறாத துறைகளான பிள்ளைவழக்கு துடிநிலை புலனறிசிறப்பு கொற்றவைநிலை வெறியாட்டு போன்ற துறைகள் பன்னிரு படலத்தைப் பின்பற்றியே இடம்பெற்றிருக்க வேண்டும். அதே சமயத்தில் புறத்திணைகளில் ஒன்றான

வெட்சித்திணை குறித்த பாடல்கள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. மேலும் உண்டாட்டு என்னும் துறையினை வெளிக்காட்டும் விதமாகவே கிடைத்துள்ளன. மற்ற துறைகள் சார்ந்த பாடல்கள் கிடைக்கவில்லை என்றே குறிப்பிடப்படுகின்றது. புறத்திணை சார்ந்த பாடல்கள் தொகுக்கப்படும் பொழுது மேற்கண்ட வெட்சித்திணை சார்ந்த பாடல்கள் என்ன காரணத்தினால் தொகுக்கப்படவில்லை என்பது இங்கு ஆராயப்பட வேண்டும். அவைகள் திட்டமிட்டே தொகுக்கப்படவில்லையா? அல்லது உண்மையிலேயே கிடைக்கவில்லையா? என்பது தெரியவில்லை. அத்தகைய பாடல்கள் கிடைத்திருந்தால் பல்வேறு தகவல்கள் நமக்கு கிடைக்கும்.

## போரின் தேவை

ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு போர் தொடுப்பது அறமாகவே கருதப்பட்டது. அதே வேளையில் அத்தகைய போரில் பல்வேறு கொள்கைகளும் வகுக்கப்பட்டு இருந்தன. பழங்காலம் முதலே போர் நடைபெறக்கூடிய இடம் ஒரு நாட்டினுடைய வெட்ட வெளியாக இருக்கக் கூடிய இடம் ஆகும். அதே போன்று போர் நடைபெறக் கூடிய இடத்தில் பெண்கள் குழந்தைகள், முதியவர்கள், நோயாளிகள் முதலானோர் இருக்கக் கூடாது. மேலும் போர் நடைபெறும் நேரம் பகல் வேளையாக இருக்க வேண்டும். அதே வேளையில் போர் காலையில் சூரியன் தோன்றும் போது தொடங்கப்பட வேண்டும் மற்றும் சூரியன் மறையும் பொழுது நிறைவடைய வேண்டும். போரில் ஈடுபடக் கூடிய வீரர்கள் மற்றவர்களுடன் போர் செய்யும் பொழுது சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஒரு வீரனுடைய முதுகில் தாக்கக் கூடாது. தனக்கு சமமான வீரருடன் தான் போர் செய்ய வேண்டும். தோற்ற வீரனைத் தாக்கக் கூடாது முதலான பல வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதாக அறிகிறோம். இதற்கான சான்றுகள் பல சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. போரினுடைய வரலாற்றினை நோக்கும் பொழுது இனக்குழு மோதல்கள் தொடர்ச்சியாகவே நடந்துள்ளன. இங்கு போர் பற்றி க. கைலாசபதி கூறும் கருத்துக்கள் நோக்கத்தக்கன.

'பழைய குலமரபுக் குழுக்கள் தம்முள் முட்டி மோதிய போரின் விளைவாக வர்க்கங்கள் தோன்றிக் கொண்டிருந்த நிலைமையிலேயே பெரும்பாலான சான்றோர் செய்யட்கள் பிரதிபலிக்கினறன' என்று குறிப்பிடுகின்றார் (Kailasapathy, 1999).

மேலும் அவர் 'உணவு உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றமும் நகரங்கள் பல தோன்றியமையும் ஒருமுகப்படுத்தப்பட்ட அரசுகள் உருவானது ஆகியனவும் தொடக்க காலப் போர்களுக்கு காரணமாக இருந்தன' என்றும் கைலாசபதி குறிப்பிடுகின்றார் (Kailasapathy, 1999).

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் கருத்துப்படி வெட்சியும் அதன் துறைகளும் ஆநிரைகள் கைப்பற்றப்படுதலின் வளர்ச்சியே என்று குறிப்பிடலாம்.

ஒரு நாட்டினையுடைய பெரும் செல்வங்களாகக் கருதப்படும் பசுக்கூட்டங்களை போர் தொடுக்கும் நாடு முதலில் அந்நாட்டின் பசுக்கூட்டங்களைக் கைப்பற்றிச் செல்லுதலை வெட்சித்திணை குறித்தது. ஒரு தலைவனின் உடைமைகளைக் கைப்பற்றுவதைப் போல ஒருவனின் பிரியமானவற்றைக் கைப்பற்றுவதாகக் கொள்ளலாம். இங்கு ஆநிரைகளைக் கைப்பற்றுவது என்பது போரின் குறிப்பிட்டதொரு வளர்ச்சியாகக் கருத இடமுண்டு.

இதனை 'வேட்டைக்குரிய விலங்கின்மீது நிகழ்த்தப் பெற்ற போர்கள் காலப்போக்கில் இனக்குழுக்களுக்கிடையே நிகழ்த்தப் பெற்றுள்ளன. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக ஆநிரை கவர்தலின் போது ஏற்பட்ட போர்கள் காணப்படுகின்றன.' என்று கே. பழனிவேலு அவர்கள் தம்முடைய நூலில் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம் (Pazhanivelu, 2010).

'ஆநிரை கவர்தலுக்காகப் போர் நிகழந்து கொண்டிருந்த நிலைமாறி வளர்ச்சியடைந்து நாடு பிடித்தலுக்காகப் போர்கள் நிகழ்த்தப்பெற்றுள்ளன. ஆநிரை கவர்தலில் நிகழந்த போர்கள் குறுகிய காலத்திலேயே முடிந்து விட்டன. நாடு பிடித்தலுக்காhக நிகழந்த போர்கள் சற்று நீண்ட போர்களாக இருந்துள்ளன' என்று தற்கால போர் பற்றிய கருத்தினை கே. பழனிவேலு அவர்கள் குறிப்பிடுகின்றார் (Pazhanivelu, 2010).

## முடிவுரை

புறத்திணைகளில் ஒன்றான வெட்சித்திணை தொடக்கத்தில் ஆநிரை கவர்தலை மட்டுமே குறித்தது. அவ்வொழுக்கம் பாலைத்திணையில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்பபட்டது. மேற்கூறப்பட்ட கருத்துக்களிலிருந்து போர் என்பது நின்று தாக்குவதும் சென்று தாக்குவதும் ஆகிய இரு நிலைகளைக் கொண்டே இருந்தது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. அத்தகைய போர் நிலை வெட்சி முதலாக பாடாண் வரை பல்வேறு திணைகளாக வளர்ச்சியடைந்ததை அறிய முடிகின்றது. வெட்சித் திணை என்பது தொல்காப்பியத்தில் ஏழு என்றும் புறப்பொருள் வெண்பாமாலையில் பன்னிரண்டு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதனிடையே ஆரம்பத்தில் ஒரு திணையில் இருந்து மற்றொரு திணையில் உள்ள ஆநிரைகளைக் கைப்பற்றிய நிலையைமட்டும் தான் இது குறித்ததது. நாளடைவில் நிரை கவர்தல் என்பதை அதாவது பசுக் கூட்டங்களைக் கைப்பற்றுதல் பாதுகாப்பு கருதியா? அல்லது பகை நாட்டினுடைய செல்வங்களைக் கொண்டு வரும் நோக்கிலா? என்பது குறித்தும் வருங்கால ஆய்வுகள் அமைய வேண்டும். தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெட்சித் திணை குறித்த சொல்லாடல் புறப்பொருள் வெண்பாமாலையில் எத்தகைய மாற்றங்களை அடைந்துள்ளது? என்பது குறித்தும் ஆராயப்பட வேண்டும். அதோடு புறத்திணைகளில் ஒன்றான வெட்சித் திணையினை சங்கப்பாடல்களைக் கொண்டும் பல இலக்கணங்களைக் கொண்டும் ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

## References

Iyyanarithanar, (2012) Purapporul Venbamaalai, 1st ed, Kathir Pathipagam, Thiruvaiyaru, India

Kailasapathy, K., (1999) Pandai Tamizhar Vaazhvum Vazhipaadum, 3rd ed, New Century Book House Pvt Ltd., Chennai

Kovindhan, K., (2003) Pandai Tamilar Por Neri, Tamilthai Pathippagam, Chennai, India

Manikkavasagan, G., (2010) Tholkaappiyam, Uma Pathippagam, Chennai, India

Pazhanivelu, K., (2010) Sanga Ilakkiyam Pattu Marapum Ezhuthu Marapum, New Century Book House Pvt Ltd., Chennai, India

Venkatesan, K., (2017) Ancient Indian History, Varthaman Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License